# <u>படிக்கின்ற போதே மாணவர்களுக்கு வேலைவாய்ப்பு பெற்றுத்தரும் அன்னைமாதாம்மாள்ஷீலாபொறியியல்கல்லூரியில் மாபெரும் வளாகத் தேர்வுநடைபெற்றது.</u>

எருமப்பட்டி, அன்னை மாதாம்மாள் ஷீலா பொறியியல் கல்லூரியில் வளாகத் தேர்வு **11.11.16 வெள்ளிக்கிழமை**யன்று நடைப்பெற்றது. இவ்விழாவை **கல்லூரியின் தாளாளர் திருமதி.P.ஸ்வர்ணலதாமணி** அவர்கள் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். இவ்விழாவை கல்லூரியின் **தலைவர் திரு.M.மணி** அவர்கள் தலைமையேற்று சிறப்புரையாற்றினார். இந்த கல்லூரி வளாகத் தேர்வில் சிறப்பு விருந்தினராக **ஈரோடு,மண்டல ஐ.டி.பி.ஐ ஃபெடரல் இண்சூரன்ஸ்** நிறுவனத்தின் **மனிதவளமேலாளர்கள் திரு.சக்திவிஜய்** மற்றும் **திரு.ப்ரித்திவ்** கலந்துகொண்டார்கள். மேலும் **கல்லூரி முதல்வர் முனைவர்T. பரிதிமாற் கலைஞன்** அவர்கள் வரவேற்புரையாற்றினார் கல்லூரியின் **துணை முதல்வர் திரு. A. நடராஜன்** அவர்களும் கலந்துக்கொண்டு சிறப்பித்தார்.

## <u>கல்லூரியின் தலைவர்திரு. Mமணி அவர்கள் பேசியதாவது</u>

இன்று வருகை புரிந்திருக்கும் இந்த முன்னனி நிறுவனத்தில் நீங்கள் பணிபுரிவதால் உங்கள் எதிர்காலம் சிறப்பானதாய் இருக்கும். பொறியியல் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகள் இல்லையென்ற கருத்துக்கள் தற்போது நிறைய பேரிடத்தில் வேரூன்றி உள்ளது. ஆனால், அது முற்றிலும் மாறுபட்ட தவறான கருத்தாகும். இன்றைய காலகட்டத்தில் வேலைவாய்ப்புகள் என்பது கொட்டிக் கிடக்கின்றது. ஆனால்,அதை எல்லோராலும் அடைந்து விடமுடியாது. ஏனென்றால் அதற்கான தகுதியும், திறமையும் உங்களிடத்தே இருக்கவேண்டும். வேலைவாய்ப்பு போட்டித்தேர்வுகளில் பலபோட்டி நிலைகளை கடந்தாக வேண்டும். அதற்கு தகவல் தொடர்பு திறன் ஆங்கிலமொழி அத்தியாசியமாகிவிட்டது. இதில் உடல்மொழி, எழுத்துப்பயிற்சி, வாய்மொழிப் பயிற்சி எனப் பல வகையுண்டு. அன்றாடம் இந்த பயிற்சிகளை நீங்கள் மேற்கொண்டிருந்தால் போட்டித்தேர்வுகளில் வெல்வது நிச்சயம்.

ஒவ்வொரு வாய்ப்பும் அவ்வளவு எளிதாக கிடைத்து விடுவதில்லை. அதற்கு பல கட்டங்களில் முயற்சி எடுக்கவேண்டும். இன்று நடைபெற்று கொண்டிருக்கும் இந்த வேலைவாய்ப்பு உங்கள் முன் தற்போது கிடைத்துள்ளது என்றால் இதில் பலதரப்பட்டபோட்டிகளும், முயற்சிகளும் இல்லாமல் கிடைத்துவிடவில்லை.

மாணவர்களாகிய உங்கள் திறமைகளானது சமயோசிதபுத்தி, நல்லமனப்பாங்கு, நேர்மறை சிந்தனை மூலம் தான் வெளிக்கொணரமுடியும். எல்லோருமே தகுதிமிக்கவர்கள்தான் அது அவர்கள் காட்டும் ஈடுபாடு, முயற்சியை பொறுத்தே வேறுபடுகிறது.

இன்று நடைபெற்று கொண்டிருக்கும் இந்த வேலைவாய்ப்புத் தேர்வில் இந்த நிறுவனத்தின் எதிர்பார்புக்கு ஏற்ப உங்களுக்குள் இருக்கும் திறமைகளை வெளிப்படுத்த வேண்டும். ஒவ்வொருவருக்குள்ளும் திறமைகள் புதைந்திருக்கும். அதை வெளிப்படுத்த ஏதாவதொரு வாய்ப்பிற்கான திறவுகோல் வேண்டும்.

அது இன்றைய நாளில் என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக் கொண்டு இந்த வளாகத்தேர்வில் வெற்றிப்பெற்று உங்கள் பெற்றோர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இக்கல்லூரிக்கும் பெருமை சேர்க்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்வதோடு, அதற்கான பாராட்டுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்வதில் பெருமிதமடைகிறேன்.

## மனிதவளமேலாளர் திரு.சக்திவிஜய் அவர்கள் பேசியதாவது:

இன்று நடைபெற்று கொண்டிருக்கும் வளாகத் தேர்வில் மாணவர்கள் ஆர்வத்தோடு கலந்துக் கொண்டிருப்பது மகிழ்ச்சியாக உள்ளது. படிக்கின்ற போதே வேலைவாய்ப்பு கிடைப்பதென்பது அவ்வளவு எளிதானதல்ல. இன்று இந்த வாய்ப்பு உங்களுக்கு கிட்டியுள்ளதென்றால் இந்த கல்லூரியில் பயில்கின்றோம் என்பதில் நீங்கள் பெருமை கொள்ளவேண்டும். உங்கள்திறமைகளை இங்கே வெளிப்படுத்த வேண்டும். அப்போது தான் இன்று வேலைவாய்ப்பு உங்களுக்கு கிடைக்கும். வாடிக்கையாளர்களுக்கு திருப்திகரமான சேவையை அளிப்பதையே குறிக்கோளாக கொண்டுள்ளோம். இந்த நிறுவனத்தில் நிறைவான ஊதியமும், பணிஉயர்வும் நிச்சயம் கிடைக்கும் அதை பயன்படுத்தி உங்கள் வாழ்க்கைகனவை பூர்த்தி செய்துகொள்ளலாம். ஏனவே இன்றையநாள் உங்கள் வாழ்வில் உன்னதமான நாளாக அமைந்துள்ளது. அதற்கு நன்றியை செலுத்தவேண்டுமென்றால் இந்த வளாகத்தேர்வில்வெற்றிப் பெற்றாலேபோதுமானது.

இந்தவளாகத் தேர்வில் எம்.பி.ஏ. (MBA) எம்.சி.ஏ (MCA), கம்ப்யூட்டர் சைன்ஸ்& இன்ஜினியரிங் (CSE), எலக்ட்ரானிக்ஸ் கம்யூனிகேஷன் & இன்ஜினியரிங் (ECE), எலக்ட்ரிகல் & எலக்ட்ரானிக்ஸ் இன்ஜினியரிங் (EEE), எலக்ட்ரானிக்ஸ் & இன்ஸ்ட்ருமென்டேஷன் இன்ஜினியரிங் (EIE), மெக்கானிக்கல் இன்ஜினியரிங் (Mech) மற்றும் சிவில் இன்ஜினியரிங் (Civil) ஆகிய பல்வேறு துறைகளைச் சார்ந்த மொத்தம் **82 மாணவர்கள் முதற்கட்டதேர்வில்** கலந்துகொண்டனர்.

***இறுதியாக நேர்முகதேர்வுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டமாணவர்களில் 19 மாணவர்கள்வேலைவாய்ப்புத் தேர்வுபட்டியலில் இடம் பிடித்தனர்.***

**கல்லூரியின் தலைவர் திரு.M.மணி அவர்களும் மற்றும் கல்லூரியின் தாளாளர் திருமதி.ஸ்வர்ணலதாமணி அவர்களும் இந்த வளாகத் தேர்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு பணிநியமன ஆணையை வழங்கி தனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்தார்கள்.**